தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-3-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பந்தல் வகை காய்கறி பயிர்களில் நூற்புழு மேலாண்மை குறித்து உழவர் பயிற்சி

அகில இந்திய ஒருங்கிணைந்த நூற்புழு ஆராய்ச்சித் திட்டம், புதுடெல்லி மற்றும் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பாக பந்தல் வகைப் பயிர்களைப் பாதிக்கும் நூற்புழுக்களைப்பற்றியும் அதன் மேலாண்மை குறித்தும் நாச்சிப்பாளையம், கிராமம் ஊஞ்சாம்பாளையத் தோட்டத்தில் உழவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

இதில் முனைவர். இராமன் குமார் வாலியா, அகில இந்திய திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் நூற்புழுக்களால் ஏற்படும் மகசூல் இழப்பைப் பற்றி எடுத்துரைத்தார்.

பந்தல் வகைப் பயிர்களைப் பாதிக்கும் நூற்புழுக்களைப் பற்றி திட்ட பொறுப்பாளர் முனைவர். கி. பூர்ணிமா அவர்கள் விளக்கினார்.

முனைவர். ப. கலையரசன் மற்றும் நா. சுவர்ணகுமாரி, உதவிப் பேராசிரியர்கள் நூற்புழு வாழ்க்கைச் சுழற்சி, பரவும் விதம் மற்றும் நன்மை செய்யும் நூற்புழு எதிரி பூசண கொல்லியை பயன்படுத்துவது குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினர்.

மேலும் முனைவர். கமலக்கண்ணன், பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), முனைவர். சுகந்தி, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல் துறை) மற்றும் முனைவர். சீனிவாசன், உதவிப்பேராசிரியர் (பயிர் வினையியல் துறை) அவர்கள் உழவர்களுக்கான பூச்சி, நோய் மேலாண்மை மற்றும் சத்துப் பற்றாக்குறைகள் தொடர்பான உழவர்களின் கேள்விகளுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், பயிற்சியில் பங்குபெற்ற 35க்கு மேற்பட்ட உழவர்களுக்கு நூற்புழுக்களை நுண்ணோக்கி மூலம் நேரடியாக காண்பிக்கப்பட்டது. இறுதியாக திரு. செந்தில், பந்தல் விவசாய கூட்டமைப்புத் தலைவர் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்